
பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 29 | சனிக்கிழமை | 15.11.2025 | அதிர்வு 108

## பாதீட்டுக்கு நேசக்கரம் நீட்டினார் ஜீவன் எம்.பி.



2026ஆம்நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக இலங்கைத் 06



# பட்ஜட்டின் 2 ஆம் வாசிப்பு 118 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்!



## தமிழரசின் 8 உறுப்பினர்களும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு சமர்ப்பித்த 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின்இரண்டாம்வாசிப்புநேற்றுவெள்ளிக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் 118 மேலதிக வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. 06

# வரவு - செலவுத் திட்டத்துக்கு மனோ அணியினரும் ஆதரவு!

## காரணத்தையும் அவர்கள் வெளியிட்டனர்



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் மற்றும் வி.இராதாகிருஷ்ணன் ஆகியோர் வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

வாக்கெடுப்புக்கு முன், தமிழ் முற்போக்குக்கூட்டணியின்தலைவர்மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களிடம் கூறுகையில்,

“தோட்டத் தொழிலாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1,750 வேதனம் வழங்க ஏற்பாடு செய்வதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வழங்கிய உறுதியின் மீதான எங்கள் 06




வரவு – செலவுத் திட்டம் தொடர்பாகவும், இலங்கை ஜனாதிபதிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இனப் பிரச்சினைத் தீர்வு பற்றிய நேரடிப் பேச்சுக்கான ஆயத்தங்கள் சம்பந்தமாகவும் கடந்த சில தினங்களாக நான் குறிப்பிட்டு வந்த விடயங்கள் அப்படியே நடந்து வருகின்றமையை வாசகர்கள் கவனிக்கக் கூடும்.

புதன் அல்லது வியாழன் நடைபெறும் ஜனாதிபதியுடனான பேச்சுகளில் இனப் பிரச்சினை குறித்து மட்டும் தீவிரமாகத் தமிழரசு கட்சி பேச வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பான விடயம் என்பதால் 13ஆம் திருத்த நடைமுறையாக்கம், மாகாண சபை தேர்தல் ஆகியவை பற்றி பேசுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அதேசமயம், தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், கடலோரப் பாதுகாப்பு அதிகார சபை, மகாவலி அபிவிருத்தி சபை ஆகியவை மேற்கொள்கின்ற ஆக்கிரமிப்பு மற்றும் 06



# ‘கார்த்திகை வாசம்’ மலர்க்கண்காட்சி யாழ். கிட்டு பூங்காவில் நேற்று ஆரம்பம்

**(எஸ்.நிதர்ஷன்)**

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற “கார்த்திகை வாசம்“ மலர்க்கண்காட்சி யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது

நேற்றைய தொடக்க விழாவில்

தொடர்ச்சி▼








## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை-2025

“என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை”

-சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)








# ‘கார்த்திகை வாசம்’ மலர்க்கண்காட்சி யாழ். கிட்டு பூங்காவில் நேற்று ஆரம்பம்

தொடர்ச்சி▲

இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான முனைவர் தொல். திருமாவளவன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் தம்பிராசா யுகேஸ் தலைமையில் நடைபெற்ற இந்தத் தொடக்க நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்துகொண்டார்.

மேலும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தொடக்க உரையாற்ற, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 23ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிட வரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம்முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு

# 4 ஆயிரம் ரூபா வழங்கினால்கூட அதனை நாங்கள் ஆதரிப்போம்!

“மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குரிய சம்பள அதிகரிப்பை எதிரணி எதிர்ப்பதாக ஆளுங்கட்சியால் முன்வைக்கப்படும் தர்க்கம் ஏற்புடையது அல்ல. தோட்டத் தொழிலாளர்களுக்கு 4 ஆயிரம் ரூபா நாள் சம்பளம் வழங்கப்பட்டால்கூட அதனை நாம் ஆதரிப்போம்.”

– இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாதீட்டு விவாதத்தில் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

“மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு எதிரணி எதிர்ப்பு இல்லை. எனவே, வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்குரிய சம்பள உயர்வை எதிர்ப்பவர்கள் என ஆளுங்கட்சி தரப்பில் முன்வைக்கப்படும் தர்க்கத்தை ஏற்க முடியாது. அப்படியானால் பாதீட்டில் சம்பள விடயம் மட்டும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

2 ஆயிரத்து 138 ரூபா நாள் சம்பளம் அவசியம் என ஜே.வி.பியின் தொழிற்சங்கவே வலியுறுத்தி இருந்தது. தோட்டத் தொழிலாளர்களுக்கு 4 ஆயிரம் ரூபா நாள் சம்பளம் வழங்கப்பட்டால்கூட அதனை நாம் எதிர்க்கமாட்டோம். ஆனால், சம்பள உயர்வை வழங்குவதற்குரிய நடைமுறை உள்ளது. சட்ட ரீதியில் அவர்களுக்கு சம்பள உரிமையை வழங்க வேண்டும்.” – என்றார்.

# அடுத்தாண்டுக்கான பரீட்சைகள் குறித்து கல்வி அமைச்சு அறிக்கை வெளியிட்டது



2026ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் பாடசாலை பரீட்சைகள் தொடர்பான அறிவிப்பை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் 2026 பெப்ரவரி 17 முதல் பெப்ரவரி 26 வரையும், 2026 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகள் ஓகஸ்ட் 9 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

2026 க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் ஓகஸ்ட் 10 முதல் செப்ரம்பர் 05 ஆம் திகதி வரையும், 2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சைகள் 2026 டிசம்பர் 08 முதல் டிசம்பர் 17 ஆம் திகதி வரையும் இடம்பெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.



### சம்பள அதிகரிப்புடன் நின்றுவிடாது

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளராக்குங்கள்

## அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதுபோல், அவர்களைச் சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவும் என்று அரசை வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஊடகங்களுக்கு நேற்று விசேட அறிவிப்பொன்றை விடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தை எடுத்துரைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பெருந்தோட்டத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தற்போதைய 1,350 ரூபா சம்பளத்துடன், 400 ரூபா அதிகரிப்பை வரவு – செலவுத் திட்டத்தில் அரசு முன்மொழிந்துள்ளது. சம்பந்தப்பட்ட தோட்ட நிறுவனம் 200 ரூபாவையும், அரசு 200 ரூபாவையும் செலுத்தும் தீர்மானத்துக்கு வந்துள்ளது.

துயர் நிறைந்த வாழ்க்கையை நடத்தி வரும் பெருந்தோட்டச் சமூகத்தினருக்கு, இந்த 400 ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள எடுத்த தீர்மானம் எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. இந்தத் தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும்.

பெருந்தோட்டச் சமூகத்துக்குச் சம்பளம் கிடைத்தால், அது ஒரு நல்ல விடயமாகும். அவ்வாறே இது சாதகமான விடயமுமாக அமைந்து காணப்படுகின்றது. அரசால் இவ்வாறு நிதிகளை ஒதுக்க முடியும்.

கோவிட் – 19 தொற்றுநோய் ஏற்பட்ட சமயம், வீழ்ச்சி கண்ட தொழிற்றுறைகளில் பணிபுரிபவர்களின் சம்பளத்தை அதிகரிக்க ஐக்கிய இராச்சிய அரசு நிதியை ஒதுக்கீடு செய்தது. இவ்வாறு நிதிகளை ஒதுக்குவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதால் மாத்திரமல்லாது, பெருந்தோட்டத் துறையில் குறைந்த அளவில் பயன்படுத்தப்படும், முற்றுலுமே பயன்படுத்தப்படாத காணிகளில் பயிரிடுவதற்கான உரிமையை வழங்கி, அவர்களைச் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை அரசு முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்வதன் மூலம் பெருந்தோட்டச் சமூகத்தை வலுப்படுத்த முடியும்.

இன்று,தோட்டத்துறையில்60-70வீத காணி உரிமைகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானதாகக் காணப்பட்ட போதிலும், தேயிலை உற்பத்தியில் இத்தரப்பு 30 வீதத்தை விடவும் குறைவான பங்களிப்பை மாத்திரமே பெற்றுத் தருகின்றது. மறுபுறம், 30 வீத காணி உரிமைகளைக் கொண்ட சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், நாட்டின் தேயிலை உற்பத்தியில் 60 – 70 வீதமான பங்களிப்பைப் பெற்றுத் தருகின்றனர்.

பயிரிடப்படாத காணிகள் அரசு மற்றும் கம்பனிகளிடம் காணப்படுவதால், இவற்றை வேலையில்லாப் இளைஞர்களுக்கும், தோட்டச் சமூகத்தினருக்கும் பிரித்து வழங்கி, அவர்களுக்கு காணி உரிமைகளை வழங்கி, தேயிலை உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய முடியும். இது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, தற்போதைய 1350 ரூபா சம்பளத்துடன், மேலும் 400 ரூபாவை அதிகரிப்பதை நான் எதிர்க்கவில்லை. எதிர்க்கப்போவதுமில்லை. பெருந்தோட்ட நிறுவனங்களால் 400 ரூபா செயற்படுத்தப்படுவதே விரும்பத்தக்கது.

பயிரிடப்படாத, பயன்படுத்தப்படாத தரிசு காணிகளை இந்த மக்களுக்குப் பெற்றுக்கொடுத்து, செய்கைகளுக்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுங்கள். இவ்வாறு செய்தால், தமது சொந்தக் காணியில், அவர்களுக்கென சொந்த வீட்டைக் கட்டிக்கொள்ள முடியும். ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் நிலைப்பாடு இதுவாகவே அமைந்து காணப்படுகின்றன.

இது இரு ஜனாதிபதித் தேர்தல்கள் கொள்கை அறிக்கையில் (விஞ்ஞாபனத்தில்) நாம் முன்வைத்த கொள்கையாகும். இதுதான் எமது செல்லுபடியான கொள்கையாகும். எனவே, இது தொடர்பான ஏனைய கருத்துக்களைப் புறந்தள்ளி வைத்து விட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் இந்த உண்மையான கொள்கையைச் சமூகமயப்படுத்துவது நமது கடமையாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையிலேனும் நாடாளுமன்றத்தில் விசேட கருத்தை முன்வைக்க இன்று எனக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இந்த நிலைக்கு நாட்டின் ஜனநாயகத்தை இல்லாதொழிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.” – என்றார்.

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் அனைத்துப் பல்கலைகளிலும் சந்தர்ப்பம்

உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்காக தகுதி பெற்ற விசேட தேவையுடைய மாணவர்களை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களினதும் அனைத்துப் பீடங்களுக்கும் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி தொடர்பான நாடாளுமன்ற ஆலோசனை உபகுழு இதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக கல்வி பிரதியமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் விசேட தேவையுடைய மாணவர்கள் பல்கலைக்கழகங்களின் 4 பீடங்களுக்காக மாத்திரமே அனுமதிக்கப்பட்டனர் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடாவடித்தன நடவடிக்கைகள் குறித்தும், மேய்ச்சல் தரைப் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமல் போனோர் விடயத்திற்கு தீர்வு போன்றவை பற்றி எல்லாம் பேச வேண்டி இருக்கும். அவை தவிர்க்க முடியாதவை.

ஆனால் அவற்றை பேசத் தொடங்கி விட்டு, பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்குங்கள், ஒசு சலாவை எங்கள் பிரதேசத்தில் திறவுங்கள், அந்த அபிவிருத்திக்கு நிதி ஒதுக்குங்கள், இந்த நியமனங்களைச் செய்யுங்கள் என்று மற்றைய விஷயங்களை இந்தச் சந்திப்பில் பேசாமல் தவிர்ப்பது முக்கியம். பேசச் செல்லுகின்ற தமிழரசின் பத்துப் பேரில் எட்டு பேர் எம்.பிக்கள் என்பதால் இது பற்றிக் குறிப்பிட வேண்டி இருக்கின்றது. அது மாத்திரமல்ல. இலங்கை அரசு தரப்போடு இதுவரை காலமும் பேச்சு நடத்திய ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் தமிழர் தரப்பில் புதுமுகங்கள். ஆகவே பேச்சுக்குப் போக முன்னர் தங்களுக்குள் ஒரு தடவை கூடி என்ன பேசுவது, யார் பேசுவது, எப்படிப் பேசுவது, எந்த விடயங்களை முன்வைப்பது என்பவை குறித்து தங்களுக்குள் ஆலோசித்து விட்டு தமிழரசு கட்சியினர் ஜனாதிபதி செயலகத்துக்குப் புறப்படுவது நல்லது என்று நினைக்கிறேன்.

* * *

நீதிமன்றச் செய்தி ஒன்றை இன்று விவரிக்கலாம் என்று நினைக்கிறேன். அந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜனக் டி சில்வா, சோபித ராஜகருணா, சம்பத் விஜயரத்ன ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரித்து முடிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் – 2023 இல் – அவரும், அவரது வலு சக்தி அமைச்சர் காஞ்சனா விஜயசேகரவும் சேர்ந்து ஓர் அமைச்சரவைப் பத்திரத்தை நகர்த்தினர். அந்த அமைச்சரவை முடிவுக்கு அமைய இலங்கை மின்சார சபையின் கட்டணங்கள் எக்கச்சக்கமாக உயர்த்தப்பட்டன. நாடு மிக மோசமான பொருளாதார நிலைமையில் மூழ்கி இருக்கையில், நாட்டை அதிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கை என்ற பெயரில் இதுவும் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கட்டண உயர்வுக்கு அப்போது பொதுப் பாவனை ஆணைக் குழுவின் தலைவராக இருந்த ஜனக்க ரட்நாயக்க இணங்கவிலை. அது பெரும் அநீதி என்று பகிரங்கமாகக் குறிப்பிட்டு அதனை முழுமையாக எதிர்த்தார். ஆனால் ஆணைக் குழுவின் ஏனைய ஆணையாளர்களின் ஆதரவோடு அந்தக் கட்டண உயர்வை வலு இறுக்கமாக நடைமுறைப்படுத்தியது அப்போதைய அரசு. அதற்கு இணங்காத பொதுப் பாவனை ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரட்நாயக்க அதற்காகப் பின்னர் நாடாளுமன்றத்தில் சிறப்புப் பிரேரணை கொண்டுவரப்பட்டு பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அந்தக் கட்டண உயர்வுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களையே உயர் நீதிமன்றம் நேற்று விசாரணை செய்து தீர்ப்பை ஒத்தி வைத்திருக்கிறது.

அந்தக் கட்டண உயர்வின்படி மாதாந்தம் 30 யூனிட்டுகள் வரையும் அல்லது 30 முதல் 60 யூனிட்டுகள் வரையும் பாவிக்கும் – வசதி குறைந்த பாவனையாளர்கள் இரண்டரை மடங்கு கட்டணத்தை மேலதிகமாக செலுத்த நிர்பந்திக்கப்பட்டனர். ஆனால் பெருந்தொகையாக மின்சாரத்தைப் பாவிப்பவர்களுக்கு பெரிய அளவில் கட்டணம் உயர்வு வழங்கப்படவில்லை. இது தவறானது என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுத் தலைவர் ஆரம்பத்தில் இருந்து உறுதியாக எதிர்த்தமையால் அவர் பதவியில் இருந்து தூக்கி வீசப்பட்டார்.

இந்தக் கட்டண உயர்வின் காரணமாக ஒன்பது லட்சம் வீட்டுப் பாவனையாளர்கள் மின் துண்டிப்பை எதிர்கொள்ளும் அவலத்தைச் சந்திக்க நேர்ந்தது.

இந்த மின் கட்டண உயர்வு தவறு என்று ஜனக்க ரட்நாயக்க தாக்கல் செய்த மனுவும் இன்னொரு பொது பிரமுகர் தாக்கல் செய்த மனுவுமே நேற்று உயர் நீதிமன்றத்தில் விசாரித்து முடிக்கப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும் இந்த மனுக்களை ஆதரித்து வாதாடினர்.

விளிம்பு நிலை மக்களிடம் இருந்து மின் கட்டணம் என்ற பெயரில் பெருந்தொகை சூறையாடப்பட்டமை தவறு என்று உத்தரவிடவும், அப்படி அதிகப்படியாக அறவிடப்பட்ட பணத்தை அந்த மக்களுக்கே மீளளிக்கும்படி உத்தரவிடக் கோரியுமே இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் இழைக்கப்பட்ட அநீதிக்கு, காலம் பிந்தியாவது நீதி கிடைக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## பட்ஜட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்கெடுப்பில் 160 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 42 பேர் எதிராகவும் வாக்களித்தனர். மேலும் 8 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விலகி நின்றனர்.

ஆளும் கட்சியின் 156 உறுப்பினர்களும், தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சிலிண்டர் கூட்டணி, சர்வஜன அதிகாரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த 42 உறுப்பினர்கள் வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 8 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் கட்சியின் உறுப்பினர் காதர் மஸ்தான் உட்பட 14 பேர் சபை அமர்வில் பங்கேற்கவில்லை.

2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மறுநாள் 8ஆம் திகதி முதல் நேற்று 14 ஆம் திகதி வரை வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது. இந்நிலையில், நேற்று மாலை இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதற்கமைய குழு நிலை விவாதம் இன்று 15 ஆம் திகதி முதல் எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் திகதி வரை 17 நாட்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைய 2025 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

## பாதீட்டுக்கு நேசக்கரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம். பி. வாக்களித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வைக் கருத்தில் கொண்டே பாதீட்டுக்கு ஆதரவாக ஜீவன் தொண்டமான் எம்.பி. வாக்களித்தார் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தின் கீழ் ஜீவன் தொண்டமான் எம். பி. போட்டியிட்டு வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரவு -செலவுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முகமாகவே வரவு – செலவுத் திட்டத்துக்கு நாங்கள் ஆதரவு அளிக்கின்றோம்.

12 மாவட்டங்களில் அமைந்துள்ள மூன்று அரச தோட்ட நிறுவனங்கள், 22 பிராந்திய தோட்ட நிறுவனங்கள், சிறு தோட்ட உடைமையாளரது தோட்டங்கள் ஆகிய அனைத்திலும் தொழில் புரியும் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரி ரூ.1,750 கிடைக்க வேண்டும்.

இந்தச் சம்பளத் தொகைக்கு பின்னுள்ள கட்டமைப்பை ஆராய்வதில் தங்களுக்கு ஆர்வம் இல்லை. அது அரசின் பொறுப்பு." – என்றார்.

# நவீன தொழில்நுட்பத்துடன் வருகின்றது சுவசெரிய அவசர நோயாளர் காவு வண்டி




நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சுவசெரிய அவசர நோயாளர் காவு வாகனத்தின் எண்ணிக்கையை 500 ஆக அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

சுவசெரிய நிதியம் தொடர்பான நிகழ்வு ஒன்றின்போது, சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த செயற்றிட்டத்திற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், மேலும் 100 நோயாளர் காவு வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் உதவியின் கீழ் 20 நோயாளர் காவு வாகனங்களையும், அன்பளிப்பாக 25 நோயாளர் காவு வாகனங்களையும் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.




# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இழப்புகள் ஐந்து மாதங்களில் அதிகரிப்பு

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் இழப்புகள், 2025/26 நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 12.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சரக்கு வருவாய் வீழ்ச்சி மற்றும் விமானப் பராமரிப்புச் செலவு அதிகரிப்பு ஆகியவையே இதற்குக் காரணமாகுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் முதல் ஓகஸ்ட் 2025 வரையிலான காலகட்டத்தில், வலுவான பயணிகள் தேவை மீட்சி காரணமாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்ஸின் பயணிகள் வருவாய் 7 வீதம் அதிகரித்து 95.4 பில்லியன் ரூபா உயர்ந்துள்ளது.

பயணிகள் பொதிகள் 76.4 வீதத்திலிருந்து 82.6 வீதமாக மேம்பட்டதுடன், பயணிகள் எண்ணிக்கை 22 வீதமாக வளர்ச்சியடைந்தது இந்த உயர்விற்கு உதவியது.

எனினும், சரக்கு வருவாய் 1.8 பில்லியன் ரூபா குறைந்ததுடன், பிற வருமானம் 2.5 பில்லியன் ரூபா சரிந்தது, இதனால் ஒட்டுமொத்த வருவாய் வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டது.

மேலும், ஏப்ரல் முதல் ஓகஸ்ட் 2025 வரையிலான காலகட்டத்தில் செயல்பாட்டுச் செலவுகள் 3 வீதம் அதிகரித்தன.

இதற்கு முக்கியக் காரணம், அதிகரித்த விமானப் பராமரிப்பு, நிலையங்கள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் ஆகும்.

எரிபொருள் செலவுகள் குறைந்ததால் இந்த அதிகரிப்பு ஓரளவு ஈடு செய்யப்பட்டது. நிறுவனம் விமானப் போக்குவரத்தில் 4.1 பில்லியன் ரூபா இழப்பைப் புகாரளித்தது.

இருப்பினும், விமான நிலையச் சேவைகள் மற்றும் தரை கையாளுதல் மற்றும் பயிற்சி உட்பட பிற வருமானங்களைக் கணக்கில் கொண்ட பிறகு, இது 4.9 பில்லியன் ரூபா லாபமாக மாறியது.

ஸ்ரீலங்கன் கேட்டரிங் மூலம் 2.6 பில்லியன் ரூபா நிகர வருமானம் மேம்பட்ட போதிலும், குழுமத்தின் நிகர இழப்பு ஓகஸ்ட் மாத இறுதியில் 12.6 பில்லியன் ரூபாவாக பதிவானது.

இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட 4.2 பில்லியன் ரூபா இழப்புடன் ஒப்பிடுகையில் மிக அதிகம். இதற்கு முக்கியக் காரணம், 8.5 பில்லியன் ரூபா மதிப்புள்ள குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி இழப்புகள் மற்றும் அதிக நிதிக் கட்டணங்கள் ஆகும் என்று நிதி அமைச்சு கூறியுள்ளது.

அறிக்கையின்படி, ஓகஸ்ட் 2025 இறுதி நிலவரப்படி, விமான நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்கள் 198.6 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இது மார்ச் 2025 இறுதி நிலவரப்படி இருந்த 182 பில்லியன் ரூபாவில் இருந்து அதிகரித்துள்ளது. இது சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமைகள் மற்றும் பெறவேண்டிய தொகைகளில் ஏற்பட்ட சேர்க்கைகளைப் பிரதிபலிக்கிறது.

ஓகஸ்ட் 2025 இறுதி நிலவரப்படி திரட்டப்பட்ட இழப்புகள் 631.5 பில்லியன் ரூபாவாக விரிவடைந்துள்ளது, இது நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பைத் தொடர்ந்து பலவீனப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாற்றீட்டைப் பகிரங்கப்படுத்துக!

நாட்டில் நீண்ட காலமாக நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிக மோசமானது - மிக கொடூரமானது - குரூரமானது - மிலேச்சத்தனமானது - எனப் பல தடவைகள் இந்தப் பத்தியில் குறிப்பிட்டு வந்திருக்கிறோம். பெயரில் அது கொண்டுள்ள பயங்கர வாதத்தின் மறுவடிவமே அதுதான்.

இலங்கையில் 47 ஆண்டுகளாக நீடிக்கும் அந்த மோசமான சட்டத்தை நீக்குகிறோம் என்ற பெயரில் நீண்ட காலமாக முயற்சி எடுக்கப்பட்டு வந்தாலும், அது நடைமுறையில் சாத்தியமாகவில்லை. நல்லாட்சி காலத்தில் இத்தகைய முயற்சியாக மாற்றீட்டுச் சட்டம் ஒன்று தயாராகி, நாடாளுமன்றுக்கு விவாதத்துக்கு வருமளவுக்கு முன்நகர்ந்த போதிலும், அந்த மாற்றீட்டுச் சட்டமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போல மோசமான அம்சங்களை கொண்டிருந்தமையால், அதற்கு அப்போது எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு அந்த அளவில் அது இடைநிறுத்தப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது என்பது அல்லது அதற்காக மாற்றீட்டுச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதை ஆகிவிடக் கூடாது என்பது முக்கியமானது.

நாட்டில் ‘அரச பயங்கரவாதம்’ கட்டவிழ்த்து விடுவதற்கு காரணமான இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குகிறோம், மாற்றீடு செய்கின்றோம் என்ற பெயரில் மற்றும்ஓர்அரசபயங்கரவாதத்திற்கு வாசல் திறந்து விடப்படக்கூடாது.

ஆகையினால்தான் இந்த சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து குரல் எழுப்பி வரும் புத்திஜீவிகளைக் கொண்ட ‘சர்வ ஜன நீதி அமைப்பு’ இப்போது மாற்றீட்டுச் சட்டமாக முன்வைக்க எடுக்கும் திட்டத்தை பகிரங்கப்படுத்தும்படி கோரி இருக்கின்றது.

பேராசிரியர் ஜெயதேவ உயங்கோட, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, எரான் விக்ரமரத்ன, ஏ.எம்.பாயிஸ், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், பவானி பொன்சேகா, ஏர்மிசா டெகல், நடிஷானி பெரேரா, ஜெருஷா குரோசெட் தம்பையா, ஸ்வஸ்திகா அருள்லிங்கம், ரவீந்திரன் நிலோஷன், பெனிஸ்லோஸ் துஷான் ஆகியோரே சர்வஜன நிதி அமைப்பின் சார்பில் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கான சட்ட மூலத்தை வரைவதற்கு நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையையும் வரைவையும் நீதி அமைச்சரிடம் கையளித்துள்ள பின்னணியில் அவற்றைப் பகிரங்கப் படுத்துமாறு அந்த அமைப்பு கோரி இருக்கின்றது.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் முழுமையாக உறுதியளித்திருப்பதை சுட்டிக் காட்டி உள்ள புத்திஜீவிகளைக் கொண்ட அந்த அமைப்பு, அந்த வாக்குறுதியை, புதிய வரைவுச் சட்டமூலம் முழுமையாக பிரதிபலிக்கும் என்று தாங்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்பதையும் தெரிவித்திருக்கின்றது.

அது வரைவு வெளியில் வந்தால் தான் உண்மை தெரிய வரும். சாக்குக்குள் இருப்பது வெளியே வந்தால்தான் அது புலியா, பூனையா என்பது தெளிவாகும்.



# அநாகரிக வார்த்தைப் பிரயோகங்களை நாடாளுமன்றில் பயன்படுத்தத் தடை

நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளின் போது, பொருத்தமற்ற, அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார்.

நேற்றைய நாடாளுமன்ற சபை நடவடிக்கையின் ஆரம்பத்தில், சபாநாயகரின் அறிவித்தலாக அவர் இதனை குறிப்பிட்டார்.

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்துவதை தொடர்ச்சியாக தாம் அவதானித்து வருவதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் நாடாளுமன்ற கௌரவத்தை சீர்குழைப்பதுடன், வேதனைப்படக்கூடிய விடயமாக கருதுவதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் பெயர் கூறியும், அவர்களை இலக்கு வைத்தும், அநாகரீகமான வார்த்தைப் பிரயோகங்களை இனிவரும் காலத்தில் சபையில் பயன்படுத்தக்கூடாது என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன எச்சரித்துள்ளார்.

நாட்டின் உயர்பீடமாக திகழும் நாடாளுமன்றத்தின் ஒழுக்கத்தை உரியமுறையில் பேணுவதற்கு, மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் சபாநாயகர் கோரியுள்ளார்.

# மோசடியாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



“யாழ் மாவட்டத்தின் வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறை – மருதங்கேணி வீதியின் தற்போதைய நிலைமைகளை பார்க்கையில், கடந்த காலங்களில் அந்த வீதி அபிவிருத்தி செய்யப்படும் போது ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்கலாம். மோசடிகள் உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.”

– இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் நகர அபிவிருத்தி அமைச்சரும், சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.சிறீதரனால் நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடமாராச்சி கிழக்கு பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கீழான இரண்டு வீதிகள் உள்ளன. இப்போது பருத்தித்துறை – மருதங்கேணி பி 370 வீதியின் ஒரு பகுதி மாத்திரமே சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

சேதமடைந்த குறித்த பகுதி 2016 –2017 காலப்பகுதியில் மகநெகும நிறுவனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் பல இடங்கள் தற்போது சேதமடைந்த நிலையில் இருக்கின்றன. வீதியின் அடியில் காணப்படும் மண் தட்டுக்களால் வீதி சேதமடைந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தற்போது உள்ளக நிதி மதிப்பீடு பிரிவினால் ஆரம்பப்பட்ட ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. அதன் இறுதி அறிக்கைகள் கிடைக்கப்பெற்ற பின்னர் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அந்த வீதியின் அபிவிருத்தி பணிகளுக்காக ஜனவரியில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதி உடைந்துள்ளமையை பார்க்கும் போது ஊழல் நடந்துள்ளதாக புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.” – என்றார்.

# நல்லாட்சி, சமூக நீதிக்கு கிட்டிய வெற்றி பிஹார் தேர்தல் குறித்து மோடி பெருமிதம்



நல்லாட்சி வென்றுள்ளது. வளர்ச்சி வென்றுள்ளது. மக்கள் நலன் வென்றுள்ளது. சமூக நீதி வென்றுள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக் கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்க உள்ள நிலையில், தேர்தல் வெற்றிக்காக பிஹார் மக்களுக்கு நன்றி தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி பதிவுகளை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் குறிப்பிடுகையில்,

“நல்லாட்சி வென்றுள்ளது. வளர்ச்சி வென்றுள்ளது. மக்கள் நலன் வென்றுள்ளது. சமூக நீதி வென்றுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் இணையற்ற வெற்றியை அளித்ததற்காக பிஹார் மக்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி. உங்களின் இந்த ஆணை, பிஹார் மக்களுக்கு சேவை செய்வதற்கும் பிஹாருக்காக உழைப்பதற்கும் எங்களுக்கு கூடுதல் பலத்தை அளித்துள்ளது.

சமீப மாதங்களாக கடும் உழைப்பை வழங்கிய தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஒவ்வொரு தொண்டரையும் நான் பாராட்டுகிறேன். அவர்கள் மக்களிடையே பணியாற்றி இருக்கிறார்கள், நமது திட்டங்களை மக்களிடையே கொண்டு சென்றிருக்கிறார்கள், எதிர்க்கட்சிகளின் பொய்களை தோலுரித்திருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

வரும் காலங்களில் பிஹாரின் முன்னேற்றம், உள்கட்டமைப்பு மற்றும் கலாசாரத்துக்காக நாங்கள் இன்னும் அதிகமாகச் செய்வோம். மாநிலத்தின் இளைஞர் சக்தியும், பெண்கள் சக்தியும் செழிப்பான வாழ்க்கைக்கான வாய்ப்புகளை அதிக அளவில் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி மாநிலத்துக்கு முழுமையான வளர்ச்சியை வழங்கியுள்ளது. எங்களின் சாதனைப் பதிவுகள் மற்றும் மாநிலத்தை புதிய உயரத்துக்குக் கொண்டு செல்வதற்கான எங்களின் தொலைநோக்குத் திட்டங்களின் அடிப்படையில்தான் மக்கள் எங்களுக்கு வாக்களித்துள்ளனர். இந்த இணையற்ற வெற்றிக்காக, தேசிய ஜனநாயகக் கூட்டணி குடும்பத்தைச் சேர்ந்த முதல்வர் நிதிஷ் குமார், சிராக் பாஸ்வான், ஜிதன் ராம் மாஞ்சி, உபேந்திர குஷ்வாஹா ஆகியோருக்கு எனது வாழ்த்துகள்.” என தெரிவித்துள்ளார்.







# பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் என்.டி.ஏ. வுக்கு மகத்தான வெற்றி

## மீண்டும் ஆட்சி அமைக்கிறது

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் 200 இற்கு மேற்பட்ட தொகுதிகளை வசப்படுத்திய ஐக்கிய ஜனதா தளம் – பா.ஜ.க. இணைந்த என்.டி.ஏ மகத்தான வெற்றியுடன் மீண்டும் ஆட்சி அமைக்கிறது.

பெரும்பான்மைக்கு 122 இடங்களின் வெற்றி தேவை எனும் நிலையில், என்.டி.ஏ பதிவு செய்திருப்பது வரலாற்று வெற்றியாக கருதப்படுகிறது.

அதேவேளையில், 35 இடங்களை வெல்லவே திக்குமுக்காடிய ராஷ்டிரிய ஜனதா தளம் – காங்கிரஸின் மகா கூட்டணி படுதோல்வியை சந்தித்துள்ளது.


பெரும் எதிர்பார்ப்புகளுடன் பிஹார் தேர்தலை சந்தித்த ஆர்.ஜே.டி – காங்கிரஸின் மகா கூட்டணிக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்த சறுக்கல்களுக்கு காங்கிரஸ்தான் காரணம் என்ற பேச்சும் எழுந்துள்ளது.

பிஹாரில் 25 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்ட ஓ.வை.சியின் ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சி 5 தொகுதிகளில் வென்று கவனத்தை ஈர்த்துள்ளது. சீமாஞ்சல் பகுதியில் ஓர் இடத்தில் ஆர்.ஜே.டி. கட்சி வெல்லாதது அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் ஓர் இடத்தைக் கூட வெல்லவில்லை. தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட போதிலும் பிரசாந்த் கிஷோரின் புதிய கட்சி மோசமான தோல்வியை சந்தித்துள்ளது

இந்த நிலையில், இந்தியாவின் வளர்ந்த மாநிலங்களின் வரிசையில் பிஹார் இடம்பெறும் என தெரிவித்துள்ள நிதிஷ் குமார், “எங்கள் அரசாங்கத்தின் மீது மிகுந்த நம்பிக்கையை வெளிப்படுத்திய வாக்காளர்கள் அனைவருக்கும் மனமார்த்த நன்றி” என்று தெரிவித்துள்ளார்.





# கீய்வின் பல மாவட்டங்களைக் குறிவைத்து ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்திய ரஷ்யா

உக்ரைன் தலைநகர் கீய்வின் பல மாவட்டங்களைக் குறிவைத்து ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தி ரஷ்யா அதிர வைத்துள்ளது.

குறைந்தது 11 பேர்கள் காயங்களுடன் தப்பிய இந்த தொடர் தாக்குதலை அடுத்து அவசர சேவைக் குழுவினர் சம்பவயிடத்திற்கு விரைந்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண் உட்பட ஐந்து பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதில் ஆண் ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

அதிகாரிகள் வெளியிட்டுள்ள தகவலில், உக்ரைன் தலைநகர் மீதான தாக்குதல் தொடர்வதாகவும், மறு அறிவிப்பு வரும் வரையில் பொதுமக்கள் பாதுகாப்பு அறைகளில் இருந்து வெளியே வரவேண்டாம் எனவும் கோரியுள்ளனர்.

அத்துடன், மின்சாரம் மற்றும் குடிநீர் சேவைகள் முடங்கலாம் என நகர நிர்வாகம் எச்சரித்துள்ளது. சமூக ஊடகங்களில் வெளியான புகைப்படங்களில், தலைநகரின் பல பகுதிகள் பற்றியெரிகிறது.

இதனிடையே, அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வெளியே இடிபாடுகள் நிறைந்த தெருக்களில் மக்கள் திரண்டுள்ளனர். ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை ரஷ்யா முன்னெடுத்துள்ளதாக தெரிவித்த கீய்வின் இராணுவ நிர்வாகத்தின் தலைவர், தலைநகரின் வெப்பப்படுத்தும் அமைப்புகளும் சேதமடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரு மாவட்டத்தில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பல மாவட்டங்களில் குடிநீர் மற்றும் மின்சாரம் முடக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் எச்சரித்தார்.



உயர் அணுசக்தி அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்திய ஒரு பெரிய ஊழல் வழக்கைத் தொடர்ந்து, உக்ரைன் ஊழலைத் தொடர்ந்து கடுமையாகக் கட்டுப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இந்த வாரம் எச்சரித்த நிலையில், ரஷ்யா உக்கிரமான தாக்குதலை முன்னெடுத்துள்ளது.

இருப்பினும், ரஷ்யாவின் படையெடுப்பைத் தடுக்க உக்ரைன் தொடர்ந்து போராடிவருவதால், உதவிகள் தொடர்ந்து அளிக்கப்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

# தைவானுடன் இராணுவ ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது





தைவானுடனான 300 மில்லியன் டொலர் இராணுவ ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது.

தைவானுக்கு போர் விமானங்கள் மற்றும் பிற விமானங்களுக்கான உதிரி பாகங்களை விற்பனை செய்யும் ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது.

300 மில்லியன் டொலர் மதிப்பிலான இந்த ஒப்பந்தம் வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

எப் -16, சி -130 மற்றும் பிற இராணுவ விமானங்களுக்கான தயார் நிலையை உறுதிப்படுத்துவதற்கும், ஒப்பந்த பெறுநரின் தற்கால மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை சமாளிக்கும் திறனை வலுப்படுத்துவதுமே இந்த இராணுவ விற்பனை ஒப்பந்தத்தின் நோக்கம் என்று பென்டகன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் ஒப்புதலுக்கு தைபே பாராட்டுகளை தெரிவித்து இருக்கும் அதே நேரத்தில், சீனா கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது.



இராணுவ ஒப்பந்த ஒப்புதல் குறித்து தைவான் ஜனாதிபதி அலுவலக செய்தி தொடர்பாளர் கரேன் குவோ வெளியிட்ட அறிக்கையில், தைவான் - அமெரிக்காவின் உறவு பாதுகாப்பு துறையில் பலமடைவது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு முக்கிய அடித்தளமாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.




# அமெரிக்கா- இலங்கை இடையில் பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்

அமெரிக்காவிற்கும், இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது அமெரிக்கா – இலங்கை பாதுகாப்பு உறவுகளில் ஒரு வரலாற்று மைல்கல்லைக் குறிப்பதாக அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தோ – பசிபிக் பகுதியில் பிராந்திய ஸ்திரத்தன்மை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் தொழில்முறை இராணுவ ஒத்துழைப்புக்கு இரு நாடுகளின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் அடிக்கோடிட்டு காட்டுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம், மாநில கூட்டாண்மை திட்டத்தின் கீழ் அமெரிக்க மாநில தேசிய பாதுகாப்பு பிரிவினருடன், கூட்டு சேர்ந்த 115 நாடுகளின் உலகளாவிய வலையமைப்பில் இலங்கை இணைகின்றமை குறிப்பிடத்தக்கது.







# 24 ஆம் திகதி முதல் பஸ் கட்டணங்களை வங்கி அட்டைகள் மூலம் செலுத்த வசதி






எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் வங்கி அட்டைகள் மூலம் பஸ் கட்டணங்களை செலுத்த முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க இது குறித்த அறிவிப்பை நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இந்த புதிய வசதி அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம், பஸ்களில் பயணிப்பவர்கள் இலகுவாக பணம் செலுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.



# பேரணி நடத்தி எம்மை அச்சுறுத்தவே முடியாது!

## மக்கள் படை எம் பக்கம் என்றும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா சூளுரை

அரசைக் கவிழ்ப்பதற்காக எதிரணிகளால் 5 ஆயிரம் பேரைத் திரட்ட முடியுமெனில், அரசைப் பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கக்கூடிய வலுவான அரசியல் கட்டமைப்பு எம்வசம் உள்ளது என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

36 ஆவது கார்த்திகை வீரர்கள் ஞாபகார்த்தம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் விஹார மஹாதேவி திறந்த வெளியரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டு எதிரணி எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரால் எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் அரசுக்கு எதிராகப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் மேற்படி அறிவிப்பை ரில்வின் சில்வா வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “ஆட்சியைக் கவிழ்ப்பது பற்றியும், கொழும்பைச் சுற்றிவளைப்பது குறித்தும் தற்போது கதைக்கின்றனர். அவர்களின் நகர்வுகள் எமக்குச் சவால் அல்ல.

எப்படி போராட்டம் நடத்த வேண்டும், எப்படி பேரணி நடத்த வேண்டும் எனச் செய்து காட்டியவர்கள் நாம். எனவே, 3000 ,4000 பேரைத் திரட்டி எம்மை மிரட்ட முடியாது.

பேரணி பார்க்க வேண்டுமானால் நாமும் நடத்திக் காட்டுகின்றோம். அரசைக் கவிழ்ப்பதற்காக 5 ஆயிரம் பேரைத் திரட்ட முடியுமென்றால் பாதுகாப்பதற்காக 50 ஆயிரம் பேருடன் களமிறங்கும் வல்லமை எமது அரசியல் அணிக்கு உள்ளது. எனவே, எம்முடன் விளையாட வரவேண்டாம்.” – என்றார்.

# மாகாணத் தேர்தல் குறித்து தீர்மானிக்க பிரதமர் தலைமையில் குழு அமைக்குக!

## அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள்

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தீர்மானமொன்றை எடுப்பதற்காகப் பிரதமர் தலைமையில் குழுவொன்றை அமைக்குமாறு சபாநாயகரிடம், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் வரவு – செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே எதிரணி பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக எம்.பி. இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியது நாடாளுமன்றத்தின் பொறுப்பு என ஜனாதிபதி அறிவித்துள்ள நிலையிலேயே, எதிரணி தரப்பில் இருந்து மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கயந்த கருணாதிலக எம்.பி. மேலும் உரையாற்றுகையில், “தாம் ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு வருட காலப் பகுதிக்குள் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி அரசு உறுதியளித்திருந்தது. அந்த உறுதிமொழி



இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தேர்தல் முறைமை தொடர்பில் சட்டம் இயற்றித் தருமாறு ஜனாதிபதி நாடாளுமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே, பிரதமர் தலைமையில் விரைவில் குழுவொன்றை நியமிக்குமாறு எதிரணிகளின் சார்பில் கோரிக்கை விடுக்கின்றேன். பழைய முறைமையிலேனும் தேர்தலை நடத்தி, மக்களுக்குரிய ஜனநாயக வாய்ப்பை வழங்க வேண்டும்.” – என்றார்.



# வென்னப்புவ வெல்லமங்கரை கடற்கரையில் நேற்று 1,500 கிலோ பீடி இலைகளை கைப்பற்றிய கடற்படை

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

இலங்கை கடலோரக் காவல்படையினருக்கு கிடைத்த சிறப்பு ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று வெள்ளிக்கிழமை வென்னப்புவ வெல்லமங்கரை கடற்கரைப் பகுதியில் நடத்தப்பட்ட சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் இருந்த - முப்பத்து மூன்று பொதிகளில் அடைக்கப்பட்ட - 1,531 கிலோ பீடி இலைகளைக் கைப்பற்றினர்.

கடல் வழிக் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்கக் கடலோர காவல்படை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகள் போது இவை கைப்பற்றப்பட்டன.

அவை, மேலதிக விசாரணைகளுக்காகக் கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.




# வவுனியாவில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய பிரபல சைவ உணவகங்களுக்கு நேற்றுப் பூட்டு

(கி.வசந்தன்)

வவுனியா, ஹொறவப்பொத்தானை வீதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு பிரபல சைவ உணவகங்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்றுத் தற்காலிகமாக மூடப்பட்டன.

இரு உணவங்களும் சுகாதாரப் பரிசோதகர்களால், நேற்றையதினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது அவை சுகாதார சீர்கேட்டுடன் இருந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இரு உணவகங்களையும் எதிர்வரும் 14 நாள்களுக்கு மூடுமாறு சுகாதார பரிசோதகர்களால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.



# அம்பலவன் பொக்கணை மாத்தளன் சாள்ஸ் வளாகத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி தொடங்கப்பட்ட பணி

(பா. சதீசன்)

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ம் திகதி தமிழர்கள் வாழும் தேசமெங்கும் அனுஷ்டிக்கப்படுவது வழமை.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும் தயாராக ஆரம்பித்துள்ளன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் அம்பலவன் பொக்கணை, மாத்தளன் சாள்ஸ் மண்டப வளாகத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் பணிக்குழுவினரால் நேற்றையதினம் மாலை ஆரம்பிக்கப்பட்டன.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும், அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் தெரிவித்தனர்.














# மட்டு. போதனா வைத்தியசாலையில் தொலைபேசிகளை அபகரித்து வந்த இளைஞன் உட்பட இரண்டு பேர் கைது

## 18 கையடக்கத் தொலைபேசிகளும் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் தாதியர்கள், வைத்தியர்கள் உட்பட பலரின் கையடக்க தொலைபேசிகள் மற்றும் பணம் என்பவற்றை திருடி வந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவரையும் கையடக்க தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர் ஒருவரையும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு ஏறாவூரில் வைத்துத் தாங்கள் கைது செய்துள்ளமையுடன், திருடப்பட்ட 18 கையடக்க தொலைபேசிகளை மீட்டுள்ளனர் என மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது:-

மட்டு. போதனா வைத்தியசாலையில் நோய்காகத் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவருக்கு உதவியாக இருந்த பெண் ஒருவரின் கைப்பையில் வைத்திருந்த கையடக்க தொலைபேசி மற்றும் 10 ஆயிரம் ரூபா பணத்துடன் கைப்பை திருட்டு போயுள்ளது. இது தொடர்பாக கடந்த 2 தினங்களுக்கு முன்னர் மட்டு. தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தத் திருட்டு தொடர்பாக சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரதீப் பெர்னார்ந்தே தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் ஏறாவூர் பிரதான வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் இளைஞன் ஒருவர் 5 கையடக்க தொலைபேசிகளை கொண்டு சென்று அதன் இரகசிய எண் கொண்ட பூட்டுக்களை உடைத்துத் தருமாறு அந்தக் கடைஉரிமையாளரிடம்வழங்கியுள்ளார்.



இது தொடர்பாக மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து உடனடியாக - நேற்று முன்தினம் இரவு முற்றுகையிட்ட பொலிஸார் அந்த இளைஞனை கைது செய்தனர். விசாரணையின் போது அந்தத் தொலைபேசிகள் மட்டு. போதனா வைத்தியசாலையில் திருடி உள்ளமை தெரிய வந்துள்ளது. அதையடுத்து கடை உரிமையாளரையும் கைது செய்தமையுடன் திருடப்பட்ட 18 கையடக்க தொலைபேசிகள் மற்றும் களணி ஒன்று உட்பட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டனர்.

இவ்வாறு கைது செய்தவர்கள் மட்டு தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏறாவூர் மிச் நகரைச் சேர்ந்த 23 வயதுடைய இந்த இளைஞன் கிழமையில் ஒரு நாள் வைத்தியசாலைக்குள் நுழைந்து வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர்கள் மலசல கூடம் செல்லும் போது அவர்களின் கையடக்க தொலைபேசி, பணம் மற்றும் நோயாளிகளுக்கு உதவியாக இருப்பவர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட பலரின் கையடக்க தொலைபேசிகளை கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக திருடி வந்துள்ளார் என்பதும் -

அவற்றை ஏறாவூரில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை மற்றும் திருத்தும் இந்தச் கடையில் கொடுத்து கையடக்க தொலைபேசியின் இரகசிய எண் கொண்ட பூட்டை உடைத்த பின்னர் அதனை விற்பனை செய்து வந்துள்ளார் என்பதும் - பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




# உடையார்கட்டில் யோகட் தொழிற்சாலைக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்று

**(பா.சதீசன்)**

உடையார்கட்டு பகுதியில் அனுமதியின்றி செயல்பட்டு வந்த யோகட் உற்பத்தி தொழிற்சாலைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் அடிப்படையில் நீதிமன்றம் நேற்று 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட உடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனையின்போது, பணியாளருக்கு மருத்துவ சான்றிதழ் இல்லாமை, உரிய தொப்பி அணியாமை, முகச்சவரம் செய்யாமை, தண்ணீர் பகுப்பாய்வுச் சான்றிதழ் இன்மை போன்ற பல்வேறு சுகாதார குறைபாடுகள் அங்கு கண்டறியப்பட்டன.

இதனைத் தொடர்ந்து தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு எதிராக உடையார்கட்டு பொது சுகாதார பரிசோதகர் பிரதாஸ் நேற்றய் வெள்ளிக்கிழமை மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, உரிமையாளர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். இதனையடுத்து நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறா தவாறு கடுமையான எச்சரிக்கையும் வழங்கப்பட்டது.









# மஸ்கெலியா பிரதேசத்தில் கடும் மழை

**(மஸ்கெலியா நிருபர்)**

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கனத்த மழை பெய்தது வருகிறது.

இதன் காரணமாக நீர் தேக்கப் பகுதியில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களுக்கும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

குறிப்பாக சாமிமலை ஓயா, காட்மோர் ஓயா, மறே ஓயா, சியத்தகங்குல ஓயா மற்றும் சிற்றாறுகளில் வெள்ளம் பாய்கின்றது.

காட்மோர் நீர்வீழ்ச்சி, மறே நீர்வீழ்ச்சி, லக்சபான நீர் வீழ்ச்சி, மோகினி எல்லை நீர் வீழ்ச்சி என்பனவற்றில் அதிக அளவில் நீர் வரத்து உள்ளது.

இதன் காரணமாக இப் பகுதியில் உள்ள அனைத்து நீர் ஓடைகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு உள்ளது.

மவுஸ்சாகலை, கென்யோன், லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, கலுகல, காசல்ரீ, விமலசுரேந்திர மற்றும் ஏனைய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்ந்து வரும் நிலையில் உள்ளது.

எங்கே பார்த்தாலும் பனி மூட்டமும் காணப் படுகிறது. இதன் காரணமாக வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடும் மழையால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பண்ணையாளர்கள், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



# புத்தகங்களை இல்லாமலாக்கி, பாடசாலைகளை மூடுவதை கல்விச் சீர்திருத்தம் என்ற போர்வையில் முன்னெடுக்காதீர்!

## *கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை*

**(கனகராசா சரவணன்)**

அராசாங்கம் அத்தியாவசிய கல்விக்காக நூற்றுக்கு ஆறு சதவீத நிதியை ஒதுக்குவதாகத் தெரிவித்து, அதனை இந்த வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யாமல் மக்களை ஏமாற்றுகின்றது. அதேவேளை கல்விச் சீர்திருத்தம் என்ற போர்வையில் கிராமப்புற பாடசாலைகளை மூடுவது, பாடப்புத்தகங்களை இல்லாமல் செய்வதை அரசாங்கம் நிறுத்தவேண்டும். இல்லையேல் பல்கலைக்கழக மாணவர் போராட்டம் வெடிக்கும் என கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பு பஸ் தரிப்பு நிலையத்தில் ‘பாடசாலைகள் மூடப்படுகின்றன, பாடப் புத்தகங்கள் இல்லை, மாணவர்கள் கல்வியை விட்டு வெளியேற்றம், சீர்திருத்தத்தை தோற்கடிப்போம்’ எனும் தொனிப்பொருளில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் தலைமையில் நேற்றய் வெள்ளிக்கிழமை கையொழுத்து வேட்டை ஒன்றை ஆரம்பித்தனர்.

இதன் போது அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அராசாங்கம் அத்தியாவசிய கல்விக்காக நூற்றுக்கு ஆறு சதவீதம் நிதியை ஒதுக்குவதாகத் தெரிவித்தது. அதனை இன்று வரை வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யாமல் மக்களை ஏன் ஏமாற்றுகிறது? இன்றைய இளைய சமூதாயத்தினர் நாளைய தலைவர்கள். அவர்களின் கல்வி தேவைக்காக ஒதுக்கப்படும் நிதியை இடை நிறுத்தினால் மாணவர்களின் கல்வி எந்தளவுக்கு செல்லும் மக்களே சிந்தியுங்கள்.

இவ்வாறான அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். ஏன் என்றால் கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் 50 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பாடசாலைகளை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இவ்வாறு அரசாங்கம் கிராமபுற பாடவசாலைகளை மூடினால் அந்த மாணவர்களின் நிலை, அவர்களின் பெற்றேர்களின் நிலை, அவர்களின் வீட்டின் நிதி நிலைமை, அவர்களின் எதிர்கால வாழ்க்கை என்னாவாகும்? சிந்தியுங்கள்!

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைபரிசு தொகையை 10 ஆயிரம் ரூபாவால் உயர்தியதால் பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கம் சொல்லும் எதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்காது தலையாட்டிச் செல்வார்கள் என நினைக்கக் கூடாது

அரசாங்கத்துக்கு மீண்டும் வலியுறுத்துவது இந்த நாட்டிலுள்ள மாணவர்களை ஏமாற்றாது, போலியான நம்பிக்கையை வழங்காது, கொடுத்து வாக்குறுதிகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்பதைத்தான்.

எனவே மாணவர்களை மீண்டும் மீண்டும் முட்டாள்களாக்க வேண்டாம். அத்தோடு அரசாங்கம் இந்த பாடசாலைகளை மூடுவது மற்றும் பாடப் புத்தகங்களை நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளை உடன் நிறுத்தவேண்டும்.– எனத் தெரிவித்தார்.













# இன்றைய ராசி பலன்கள்- 15.11.2025




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கை யான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப் படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன் கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள். இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்ப தன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்க ளில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக் கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள். இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுக ளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையு டனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள்- 15.11.2025




இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்திசாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவி கரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவதற்கு நீங்கள் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும். அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.




இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாக வும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள்.எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்துகொள்ள இயலாது.



# பிரி. தூதுவர் – ரில்வின் சில்வா சந்திப்பு

(கனகராசா சரவணன்)

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் என்ரூ பட்ரிக் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் பத்தரமுல்ல பெலவத்தையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் நிகழ்கால அரசியல் நிலைமைகள் பற்றியும் பிரித்தானியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவுகின்ற நீண்டகால நட்புறவு பற்றியும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.



குறிப்பாக, பிரித்தானியா எதிர்காலத்தில் இலங்கைக்கு ஒத்துழைப்பை வழங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, ரில்வின் சில்வா இம்மாதம் 21 ஆம் திகதி பிரித்தானியாவுக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ள நிலையில் இதன் போது அதுபற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அரசியல் பிரிவின் முதனிலை செயலாளர் டொம் சொப்பர், அரசியல் ஆலோசகர் இன்ஷாப் மாகர் மற்றும் ஜே.வி.பி. பிரதிநிதித்துவம் செய்து சட்டத்தரணி மது கல்பனா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.